முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

முன்னிலை: திரு ஜெ.ஆன்ஸ் ராஜா பி.ஏ, பி.எல்.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,(பொறுப்பு)
வள்ளியூர்

2023 ஆம் வருடம் ஆகஸ்ட் மாதம் 21–ஆம் நாள், திங்கள்கிழமை

திருவள்ளுவர் ஆண்டு 2054 சுபகிருது வருடம் ஆவணி மாதம் 04–ம் நாள் திங்கள்கிழமை

**இ.ம.எண்.02/2023 இன் அ.வ.எண்.202/2016**

துரைசிங்கம் ... மனுதாரர் / வாதி

/எதிர்/

ஞானசிரோன் மணி

... 1 வது எதிர்மனுதார்/ 1 வது பிரதிவாதி

/எதிர்/

வேலம்மாள்

... 2 வது எதிர்மனுதாரர்/ உத்தேச பிரதிவாதி

இம்மனுவானது 09.08.2023 தேதி அன்று என் முன்னால் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.வெங்கடேசன் அவர்கள் ஆஜராகியும், 1 வது எதிர்மனுதாரர் காலம்சென்றுவிட்ட நிலையிலும், 2 வது எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. S.ராஜா அவர்கள் ஆஜராகியும், இருதரப்பில் எடுத்துரைத்த வாத உரையை கேட்டும் சாட்சி மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

J ANNS RAJA

Digitally signed by J ANNS RAJA
Date: 2023.08.21 11:13:16 +0530

**உத்தரவு**

காலம்சென்ற 1 வது பிரதிவாதியின் சட்டப்படியான வாரிசை அசல் வழக்கில் 2 வது பிரதிவாதியாக கட்சிசேர்க்க உத்தரவிட வேண்டி இம்மனு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. **மனுவின் சுருக்கம்:**

இம்மனுவின் மனுதாரர்கள் அசல் வழக்கில் வாதி. அசல் வழக்கானது தற்போது விசாரணைக்காக வாய்தா போடப்பட்டுள்ளது. மேற்படி 1 வது எதிர்மனுதாரர் 18.12.2020 ல் காலம்சென்றுவிட்டார் மேற்படி எதிர்மனுதாரரின் சட்டப்படியான வாரிசு அவருடைய மனைவி வேலம்மாள் ஆவார். மேற்படி எதிர்மனுதாரரின் சட்டப்படியான வாரிசை கட்சி சேர்க்க வேண்டியது அவசியாமாக உள்ளது. எனவே, 1 வது பிரதிவாதியின் சட்டப்படியான வாரிசை அசல் வழக்கில் 2 வது பிரதிவாதியாக கட்சிசேர்க்க உத்தரவிட வேண்டி இம்மனு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>2 வது எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்சாற்றுரையின் சுருக்கம்:</u>

மனுதாரரின் மனு சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல. அசல் வழக்கானது கடந்த 2022 ம் வருடம் ஏப்ரல் மாதம் விசாரணைக்காக பட்டியலிடப்பட்டு 22.04.2022 அன்று பிரதிவாதி இறந்த தகவல் அறிந்தே நீதிமன்றத்தில் ஆஜராகி பிரமாண் வாக்குமூலம் தாக்கல் செய்த அன்றைய தினம்

J ANNS RAJA
Digitally signed by J ANNS RAJA
Date: 2023.08.21 11:13:27 +0530

இரண்டு ஆவணங்களை தனது பக்கம் குறியீடு செய்துவிட்டு அதன்பின்பு கூடுதல் ஆவணங்கள் குறியீடு செய்ய 23.06.2022, 08.07.2022, 16.07.2022 ஆகிய தேதிகளில் கூடுதல் ஆவணங்கள் குறியீடு செய்துவிட்டு அதன்பின்பு 22.07.2022 அன்று எதிர்மனுதாரர் வழக்கறிஞர் பிரதிவாதி காலம் சென்றுவிட்டார் என மெமோ போட்ட பின்பும் தனது அடுத்த வீட்டில் இருப்பவரின் விபரம் தெரியவில்லை என்று வழக்கை இழுத்தடிக்க வேண்டும் என்ற என்ற எண்ணத்தில் பல வாய்தாக்கள் வாங்கிய பின்னரே காலம்சென்ற பிரதிவாதியின் வாரிசை கட்சி சேர்க்க மனு தாக்கல் செய்துள்ளார். மேலும், மனுவில் மனுதாரர் தனது காலதாமதத்திற்கான உண்மை சங்கதி எதையும் கூறவில்லை. எனவே, இம்மனுவானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா?**

3. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. மனு மற்றும் எதிருரை பரிசீலனை செய்யப்பட்டன. வழக்கு 1ம் பிரதிவாதி 01.12.2021ல் காலம்சென்றுவிட்டார். அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் காலம்சென்ற 1ம் பிரதிவாதியின் வாரிசுகள் இவ்வழக்கிற்கு அவசிய தரப்பினர் ஆவார். மனுதாரர் வழக்கில் தேவையான நபர்களை சேர்க்க அவருக்கு முழு உரிமையுள்ளது என்பதால் மனு அனுமதிக்கப்படத்தக்கதாகும்.

J ANNS RAJA

Digitally signed by J ANNS RAJA
Date: 2023.08.21 11:13:38 +0530

இறுதியாக, இம்மனுவானது அனுமதிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2023ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 21-ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

J ANNS RAJA

Digitally signed by J ANNS RAJA
Date: 2023.08.21 11:13:45 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,(பொறுப்பு)
வள்ளியூர்.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள்:</u> இல்லை

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள்:</u> இல்லை

J ANNS RAJA

Digitally signed by J ANNS RAJA
Date: 2023.08.21 11:13:52 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,(பொறுப்பு)
வள்ளியூர்.

முு.மா.உ.நீதிமன்றம்,வள்ளியூர்,
வரைவு, சீரான உத்தரவு
இ.ம.எண்.02/2023 இன்
அ.வ.எண்.202/2016
தேதி.21.08.2023